**IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR**

Date : 21.08.2025

SC. 202/2022

**அ.சா 9 – சகாதேவன்**

2025 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 ம் நாள் **சகாதேவன்** என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சகாதேவன் | தந்தை பெயர் | கோவிந்தன் |
| வயது | 36 | கிராமம் | சூளகிரி |
| வட்டம் | சூளகிரி | மாவட்டம் | கிருஷ்ணகிரி |

**முதல் விசாரணை : –**

நான் சூளாதிண்ணையில் குடியிருந்து கொண்டு , கூலி வேலை செய்து வருகிறேன். 11.02.2020 ம் தேதி நானும் பால்ராஜிம் கிருஷ்ணகிரி சென்றோம். அங்கு நகை எடுத்து விட்டு , பின்னர் என்னை பால்ராஜ் அழைத்து கொண்டு என்னை வீட்டில் விட்டு சென்றுவிட்டார், வேறு எதுவும் தெரியாது. நானும் பால்ராஜிம் ஒரே இடத்தில் வேலை செய்தோம். எனக்கு வழக்கு விவரத்தை போலிசார் தான் சொன்னார்கள். பால்ராஜ் ஏதோ ஒரு வழக்கில் , சம்மந்தப்பட்டு இருப்பதை தெரிந்து போலிசார் என்னிடம் வந்து விசாரித்தார்கள். அப்போது , நானும் பால்ராஜிம் சென்ற நகை கடைக்கு சென்று ரசீதையும் பார்த்து விசாரித்தார்கள். கட்டண சோதனை சாவடியிலும் விசாரித்தார்கள். இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

**எதிரி தரப்பு வழக்கறிஞர் சாட்சியிடம் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்ததால் அவ்வாறே பதிவு செய்யப்பட்டது.**

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur